(ஆ) குளத்திலுள்ள தனியார் இடங்களை அரசுக்குத் தர உரிமையாளர்கள் சம்மதித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம், என்ருல் எப்பொழுது வாங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—(அ) தென்காசி வட்டம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த கரிசல் குளம் கண்மாய் மேம்பாட்டிற்கான திட்டங்கள் எதுவும் கிடையாது.

(ஆ) நில உடமையாளர்கள் இக்கண்மாய் கீழுள்ள தங்கள் நிலங்களை அரசுக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டமை சம்பந்தமாக இத்துறையுடன் ஏதும் கடிதப்போக்குவரத்து இல்லை.

(இ) வினு எழவில்லை.

பெரியப்புலியூர் சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீர்.

* வினு எண் 171— திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டம் பெரியப்புலியூர் அருகில் கட்டப்பட்டுள்ள எரி சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீரால் ஆற்று நீர் கெட்டு மக்கள் உபயோகிக்க முடியாமற் போனது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அதனுல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்த்ததால் ஊராட்சி ஒன்றியம் லைசன்ஸ் வழங்க மறுத்ததா?

(இ) ஆம் எனில், இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன்: (அ) தெரியும்.

(ஆ) காமதேனு பானம் என்ற தொழிற்சாலை 1976 பிப்ரவரி மாதம் மத்தியிலிருந்து இயங்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

* வினு எண் 172— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் பொதுப் பணி மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், வரைபடம் மற்றும் மதிப்பீடு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவைகள் கிடைத்த பின் இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கான கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்குவது பரிசீலிக்கப்படும்.

Candidates admitted to M. D. Course.

* Q. No. 173— Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether the Government are aware of the fact that candidates who have been admitted to M. D. (Preventive Medicine) course in Madras Medical College are working and drawing full salary from the Department ; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்தரராஜன் :(அ) ஆம். தற்போது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

(ஆ) சென்னை மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட இருவர் எம். டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பு படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

(1) டாக்டர் கமால் ஷெரிப்.

(2) டாக்டர் உதய சங்கர்.

உதவிப் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் கமால் ஷெரிப்பை பொறுத்தவரையில், உதவிப் பேராசிரியர் பதவியில் இருந்து கொண்டு சம்பளம் பெற்றுக் கொண்டு எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

டாக்டர் பி.எம். உதய சங்கர் என்பவர் நல்வாழ்வு அலுவலர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் கொள்ளை நோய்ப் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக நியமிக்கப்பட்டார். அவர் 21–9–77 அன்று இந்த பணியில் சேரும் போது எம்.டி. (சமூக மற்றும் தடுப்பு மருந்து) படிக்கும் விஷயத்தை இவர் இயக்குநருக்கோ, அரசாங்கத்துக்கோ தெரிவிக்கவில்லை.

அரசின் ஒப்புதல் பெறாமல் இவர் இந்தப் படிப்பு, கொள்ளை நோய் பிரிவில் நல்வாழ்வு அலுவலராக வேலை செய்துக் கொண்டே படிப்பதினால், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.